புதுச்சேரி அரசு

போக்குவரத்துத் துறை

**No.3/TD/DTC/PA/2013** தேதி **20-9-2013**

<u>செய்திக்குறிப்பு</u>

## புதுச்சேரியில் ஆட்டோ மீட்டர் கட்டணம் முறைப்படுத்ததுல் தொடர்பாக அனைத்துத் தரப்பினரின் கருத்துகளும் வரவேற்கப்படுகின்றன

புதுச்சேரியில் கடந்த 29.10.2009 அன்று நிர்ணயிக்கப்பட்ட ஆட்டோ மீட்டர் கட்டண விவரங்கள் வருமாறு:

(அ) பகல் சேவை (காலை 5.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை)

(i) குறைந்தபட்ச கட்டணம் - முதல் 2 கி.மீ. : இருபது ரூபாய் மட்டும்

(ii) கூடுதல் ஒவ்வொரு கிலோ மீட்டருக்கும் : பத்து ரூபாய் மட்டும்

(iii)காத்திருப்புக் கட்டணம் : ஒவ்வொரு 30 நிமிடத்திற்கும் பத்து ரூபாய்.

(ஆ) இரவு சேவை (இரவு 10.00 மணி முதல் மறுநாள் காலை 5.00 மணி வரை): மேற்கண்ட கட்டணங்களுடன் 50% சதவீத கூடுதல் கட்டணம்

மேற்படி கட்டணம் முழுமையாக நடைமுறைக்கு வராமல் பொது மக்கள் மிகுந்த சிரமத்திற்குள்ளாயினர். எனவே பொது மக்களும், ஆட்டோ ஓட்டுனர்களும் பயன் பெறும் வகையில் புதுச்சேரியில் ஆட்டோக்களுக்கு மீட்டர் கட்டணம் முறைப்படுத்துதல் குறித்து பொது மக்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரின் கருத்துகளை அறிந்து மேல் நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனவே பொது மக்கள், ஆட்டோ ஓட்டுனர்கள், ஆட்டோ ஓட்டுனர் சங்கங்கள் மற்றும் பொது நல அமைப்புகள் புதிய கட்டணம் தொடர்பாக தமது கருத்துக்களை எழுத்து மூலமாக 23.09.2013 முதல் 27.09.2013 வரை போக்குவரத்துத் துறை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் சமர்ப்பிக்கலாம். மின் அஞ்சல் (e-mail) மூலமாக தமது கருத்துக்களை தெரிவிக்க விரும்புபவர்கள் போக்குவரத்துத் துறையின் மின் அஞ்சல் முகவரி <u>www.tc.pon@nic.in</u>யில் தமது கருத்துக்களை தெரிவிக்கலாம். அனைத்து தரப்பு கருத்தினையும் ஆய்வு செய்து புதுச்சேரியில் ஆட்டோ மீட்டருக்கான புதிய கட்டணம் நிர்ணயம் செய்யப்படும் என்று போக்குவரத்துத் துறை தெரிவித்துக் கொள்கிறது.

GOVT. OF PONDICHERRY ★ TRANSPORT DEPARTMENT ★

(எஸ்.டி.சுந்தரேசன்)

போக்குவரத்து ஆணையர்